2017 ஜூலை 5]

(ஆ) புற்றுநோய்க்கான நவீன லீனியர் ஆக்சிலேட்டர் கருவிகள், தாய்–சேய் நலனுக்கான மேன்மைமிகு மையங்கள், விபத்து மற்றும் அவசர சிகிச்சை மையங்கள் ஏற்படுத்துதல், அவசர கால நிலைப்படுத்தும் மையங்கள் ஏற்படுத்துதல், நடமாடும் அவசர சிகிச்சை ஊர்தி சேவை தொடங்குதல், மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவி நிறுவுதல், மருந்துக் கிடங்குகளுக்குக் கூடுதல் கட்டடங்கள், அரசு மருத்துவமனைகளில் சி.டி. ஸ்கேன் கருவிகள் நிறுவுதல், சுகாதார செவிலியர்களுக்குக் கைக் கணினி வழங்குதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் இந்த அரசு, மக்கள் நல்வாழ்வுத் துறையில் செயல்படுத்தப்பட இருக்கும் சில புதிய திட்டங்களை இம்மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.*

1. புற்றுநோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உயர் சிகிச்சை அளிக்க வேண்டும் என்பதற்காக, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சென்னை அடையார் புற்றுநோய் மையத்தை 120 கோடி ரூபாய் செலவில் புற்றுநோய்க்கான உயர் சிகிச்சை மையமாக அறிவித்தார்கள். இதற்கான கட்டடப் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன. இது மட்டுமன்றி, மதுரை, கோயம்புத்தூர், தஞ்சாவூர் மற்றும் திருநெல்வேலியில் நான்கு மண்டல புற்றுநோய் மையங்கள் 60 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்பட்டு பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. இந்த ஆண்டு, ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை, சென்னை; இராயப்பேட்டை அரசு மருத்துவமனை, சென்னை; அரசு இராஜாஜி மருத்துவமனை, மதுரை மற்றும் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தஞ்சாவூர் ஆகிய நான்கு மருத்துவமனைகளில் 64 கோடி ரூபாய் செலவில் புற்று நோயாளிகளுக்கு நவீன சிகிச்சை அளிக்கும் பொருட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) நவீன லீனியர் ஆக்சிலேட்டர் கருவி நிறுவப்படும்.

2. தாய்–சேய் நலனைப் பேணிக் காக்க, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த 6 ஆண்டுகளாக பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வந்தார்கள். அந்த வகையில், மயிலாடுதுறை, திண்டுக்கல், கிருஷ்ணகிரி மற்றும் திருவள்ளூர் மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் தலா 20 கோடி ரூபாய் வீதம் மொத்தம் 80 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நான்கு மேன்மைமிகு மையங்கள் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் தாய் மற்றும் சேய் இறப்பு பெரிய அளவில் குறைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

3. தமிழ்நாடு விபத்து மற்றும் அவசர சிகிச்சை முன்னெடுப்பு சேவை, தேசிய நலவாழ்வுக் குழும நிதி மற்றும் சாலைப் பாதுகாப்பு நிதியிலிருந்து திருப்பூர், இராமநாதபுரம், பெரம்பலூர், செய்யாறு, உளுந்தூர்பேட்டை, இராஜபாளையம், திருத்தணி, ஆத்தூர் மற்றும் காரைக்குடி அரசு மருத்துவமனைகளில் விபத்து மற்றும் அவசர சிகிச்சை மையங்கள் 57 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இது தவிர, 10 தாலுகா மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் அவசர கால நிலைப்படுத்தும் மையம் ஏற்படுத்தப்படும். 5 தேசிய நெடுஞ்சாலைகளில் அனைத்து முதலுதவி வசதிகளைக் கொண்ட நடமாடும் அவசர சிகிச்சை ஊர்தி சேவை தொடங்கப்படும்.

4. தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம், தற்போது 17 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் 18 எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவிகளை நிறுவி பராமரித்து வருகிறது. நடப்பாண்டில், காஞ்சிபுரம், திண்டுக்கல், விருதுநகர், இராமநாதபுரம், நாகப்பட்டினம், திருவள்ளூர், நாமக்கல், திருப்பூர் மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய 9 மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் 45 கோடி ரூபாய் செலவில் எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவி நிறுவப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

5. தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம், அரசு மருத்துவ நிலையங்களுக்குத் தேவையான மருந்துகளைக் கொள்முதல் செய்து மருந்துக் கிடங்குகளில் சேமித்து வைத்து விநியோகம் செய்து வருகிறது. போதிய இடவசதி இல்லாத, கடலூர், புதுக்கோட்டை, திருவாரூர், வேலூர், விருதுநகர், கோயம்புத்தூர், காஞ்சிபுரம், மதுரை, நாகர்கோவில், தஞ்சாவூர், திருநெல்வேலி, தூத்துக்குடி,

2017 ஜூலை 5] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

இராமநாதபுரம், திருவண்ணாமலை, திருச்சிராப்பள்ளி, நாமக்கல், கிருஷ்ணகிரி, திருவள்ளூர், திருப்பூர், சேலம், விழுப்புரம் மற்றும் நீலகிரி ஆகிய 22 மாவட்டங்களில் உள்ள மருந்துக் கிடங்குகளுக்குக் கூடுதல் கட்டடங்கள் 33 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

6. அரசு மருத்துவமனைகளில் நடப்பாண்டில் 7 சி.டி. ஸ்கேன் கருவிகள் மணப்பாறை, மேட்டூர் அணை, மன்னார்குடி, பெண்ணாகரம், ஓசூர், பரமக்குடி மற்றும் குளித்தலை ஆகிய 7 அரசு மருத்துவமனைகளில் 12 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–55

7. தாய்–சேய் நலப் பணிகளைத் திறம்பட செயல்படுத்தி வரும் 9,994 சுகாதார செவிலியர்களுக்காக 9 கோடியே 99 இலட்சம் ரூபாய் செலவில் கைக் கணினிகள் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(இ) மண்பாண்ட தொழிலாளர்களுக்கான மழைக் கால பராமரிப்புத் தொகை உயர்வு குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை சார்பில் கீழ்க்கண்ட அறிவிப்பினை இம்மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

மழைக் காலங்களில் மண்பாண்டங்கள் செய்வதில் உள்ள சிரமங்களைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2016 சட்டமன்றப் பொதுத் தேர்தலின்போது வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் ‘மண்பாண்டத் தொழிலாளர்களுக்கு தற்போது வழங்கப்படும் 4,000 ரூபாய் மழைக் கால பராமரிப்பு உதவித் தொகை 5,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்’ என்ற வாக்குறுதியை அளித்திருந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வாக்குறுதியை நிறைவேற்றும்வகையில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காட்டிய வழியில் செயல்படும் அம்மாவின் அரசு, மண்பாண்டத் தொழிலாளர்களின் மழைக்